செ.வெ.எண்-07 நாள்-06.04.2018

# அரியலூர் மாவட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் ஒருங்கிணைப்புக் குழு / மாவட்ட குழந்தைகள் பாதுகாப்புக்குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில், மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி **திருமதி.எம்.டி.சுமதி** அவர்கள் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் / தலைவர் இளைஞர் நீதிக்குழுமம் **திருமதி.மகாலெட்சுமி** அவர்கள் ஆகியோர்கள் முன்னிலையில் இன்று (06.04.2018) நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில், கடந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் 6 மாத பணிகள் குறித்தும் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

பின்னர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் வாயிலாக குழந்தை திருமணம் தடுத்தல், குழந்தை தொழிலாளர் முறையை ஒழித்தல், குழந்தை கடத்தலை தடுத்தல், பெண்குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுத்தல், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் -2012 பற்றிய விழிப்புணர்வினை பொதுமக்களிடையே வழங்க உள்ளூர் தொலைகாட்சிகள் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை அதிநவீன மின்னணு விளம்பரத்திரை வாகனத்தின் மூலமாகவும் குறும்படம் ஒளிபரப்பு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திடவும், கிராமப்புறங்களிலுள்ள பொதுமக்களுக்கு குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் தொடர் நடவடிக்கை மேற்க்கொள்ள வேண்டும் எனவும், குழந்தைகள் தொடர்பான அனைத்து பிரச்சனைகளுக்கும் 1098 என்ற கட்டணமில்லா தொலைபேசியின் மூலம் தகவல் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், துணை காவல் கண்காணிப்பாளர் மோகன்தாஸ், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் கா.முகமதுயூனுஸ்கான், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் பெ.ஜெயராணி, குழந்தைகள் நலக்குழு உறுப்பினர் கண்ணையன் மற்றும் குழந்தைகள் இல்ல நிர்வாகிகள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**